**செ.வெ. எண்: 489** **நாள்: 18-08-2012**

**செய்தி வெளியீடு**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதும், தொழில் முனைவோர் மேம்பாடு அடைவதற்கான நாற்றங்காலாக விளங்குவதுமான சிறு மற்றும் குறு தொழில்களின் வளர்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அதிக அக்கறை செலுத்தி வருகிறார்கள்.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் போட்டித் திறனை அதிகரிக்கும் வண்ணம், மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்பட்டு வரும் சிறு தொழில் நிறுவனங்கள் குழு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 6 கோடியே 90 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள பொறியியல் குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்க மாநில அரசின் பங்களிப்பான 70 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயில் 70 விழுக்காடு தொகையான 49 லட்சத்து 53 ஆயிரம் ரூபாயை முதல் தவணையாகவும்; 9 கோடியே 27 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு கொண்ட வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையில் உள்ள பொறியியல் குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்க மாநில அரசின் பங்களிப்பான 97 லட்சத்து 21 ஆயிரம் ரூபாயில் 70 விழுக்காடு தொகையான 68 லட்சம் ரூபாயை முதல் தவணையாகவும்; 6 கோடியே 90 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு கொண்ட திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூரில் உள்ள அரிசி ஆலை குழுமத்திற்கு பொது வசதி மையம் அமைக்க மாநில அரசின் பங்களிப்பான 69 லட்சத்து 5 ஆயிரம் ரூபாயில் 70 விழுக்காடு தொகையான 48 லட்சம் ரூபாயை முதல் தவணையாகவும், ஆக மொத்தம் மூன்று குழுமங்களுக்கும் சேர்த்து 1 கோடியே 65 லட்சத்து 53 ஆயிரம் ரூபாயை விடுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இதே போன்று, சிறுதொழில் முனைவோர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் பயிற்சி வளாகம் ஒன்றை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி வகுப்பறைகள், அரங்கம், நூலகம், கணினி மையம் மற்றும் தங்கும் விடுதி உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தரும் வகையில் 4 கோடியே 88 லட்சம் ரூபாய் நிதியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த நிதி ஒதுக்கீட்டில் 3 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் கல்வியியல் மற்றும் நிர்வாகக் கட்டடமும் (Academic and Administrative Block) மற்றும் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில் தங்கும் விடுதிக் கட்டடமும் (Hostel Block) கட்டப்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் தமிழகத்தில் உருவாக வழி வகுக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 18.8.2012.